Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# குறுந்தொகையில் கட்டடக்கலையும் நீர்மேலாண்மையும்

**முனைவர்.எஸ்.அலக்ஸ் ஜேக்கப்[1] & அ.ஆன்சி[2]**
**[1]உதவிப் பேராசிரியர் & [2]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை,**
**நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,**
**அன்னைவேளாங்கண்ணி கல்லூரி,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**மின்னஞ்சல்: alexjacob7373@gmail.com**
**மின்னஞ்சல் : ancyantoantin@gmail.com**

41

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு சமூகத்தின் வரலாறு என்பது அச்சமூகத்தின் மக்களின் வாழ்வியலோடு இணைந்தவை. சங்க நூல்களில் கட்டடக்கலை பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் அறிய முடிகிறது. கட்டடக்கலையில் மக்களுக்கு இருந்த ஈடுபாட்டை ஒவ்வொரு காலகட்டங்களின் வடிவமைப்பின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மக்களின் வாழ்வோடு தொழில் கலையும் வளர்ச்சி பெறுகிறது. ஆனால் இந்த தொழில் வளர்ச்சியும் அதனோடு தொடர்புடைய கலை வளர்ச்சியும் திடீரென எழுவதில்லை. அவை காலங்காலமாக தோன்றிய அனுபவத்தின் தொழில் அறிவு, கலை நுட்பம், வீடுகளின் அமைப்பு, நீர் மேலாண்மை பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதது.

**முன்னுரை**

கட்டிடக்கலை என்பது தொழில் நுட்பத்துறையின் பொறியியல் பிரிவுக்குள் அடக்கியத் துறையாகும். கட்டடக்கலை திடீரென தோற்றம் பெற்றது அன்று. அவை பழந்தமிழ் மக்களின் பல்வேறு முயற்சிகளின் விளைவாக தோன்றியவை. கட்டுமானத் தொழில்நுட்பம் அமையப் பழந்தமிழர் வாழிடங்கள், வீடு, அரண்மனை, நகரம், கோட்டை, அணைகள், நீர்த்துறைகள் என பகுத்து அமைத்துக் கொண்டனர்.

**பழந்தமிழர் வாழிடங்கள்**

மலைகளிலும், காடுகளிலும், வாழ்ந்த மக்கள் விலங்குகளிடமிருந்தும், இயற்கை அழிவிலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள வாழிடங்களை அமைத்துக் கொண்டனர். மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட வாழிடங்கள் அந்தந்தப் பகுதியின் தன்மைக்கு ஏற்ப அமைந்தன. அந்த வகையில் பழந்தமிழர் தாம் இருந்த சூழலுக்கு ஏற்ப வாழிடங்களை அமைத்துக் கொண்டதை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. தாம் வாழும் இடத்திற்கு ஏற்ப நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஐவகை நிலங்களாக பகுத்தனர். தமிழர் இப்பகுதியில் கிடைக்கும்



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

மூலப்பொருட்களைக் கொண்டே வாழிடங்களை அமைத்துக் கொண்டதை சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இயற்கையின் மூலம் பெற்ற மூங்கில்களை கொண்டு தமிழர் தமது இல்லங்களை அமைத்துக் கொண்டனர். அவர்கள் வாழ்ந்த பகுதிகள் சிறுகுடி, சேரி, பட்டினம், பாக்கம் என பலவாறாக அழைக்கப்பட்டன. ஐவகை நிலப்பகுதிகளும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக அமைந்தன.

**வீடு**

வீடுகள் “மனை“ என அழைக்கப்பட்டன.

”இனியவோ பெரும தமியோர்க்கு மனையே”[1]

இப்பாடலில் மனை என்னும் சொல் வீட்டைக் குறிக்கிறது. தலைவனை பிரிந்த தலைவிக்கு எத்தகைய அழகிய வீடுகளும் இனிமை தருவதில்லை என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

பழந்தமிழர் வாழ்ந்த வீடுகள் அகன்ற பெரிய முற்றத்தினை உடையனவாக இருந்தன. இந்த முற்றங்கள் காற்றும், வெளிச்சமும் வருவதற்கு உரிய வாயிலாக அமைந்தன.

சங்க காலத்தில் அகன்ற முற்றங்கள் இருந்ததை,

”கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து”[2]

வீட்டின் அகன்ற பெரிய முற்றத்தில் தானியங்களை உலர வைத்திருந்தனர். வீடுகளில் தங்கும் குருவிகள் முற்றத்தில் உலரும் தானியங்களை தின்னும். மேலும்,

”எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்”[3]

இப்பாடலில், வீட்டினை அழகிய பெரிய முற்றத்தில் புன்னை மரத்தின் மலர்கள் சிதறிக்கிடந்தது காண்பதற்கு பொரி சிதறி கிடப்பன போன்று தோற்றமளித்தன. மேலும்,

”கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்குடல் நாட”[4]

இப்பாடலில் கன்று பசுவிடம் பால் குடித்துக் கொண்டிருக்க, வீட்டின் முற்றத்தில் போடப்பட்டிருந்த திணைப்பயிரை பெண்யானை உண்டன.

வீடுகளின் முற்றங்களில் சிறுபறவைகளும், வளர்ப்புப் பிராணிகளும் விளையாடித் திரிந்ததை உணர முடிகிறது. பழந்தமிழ் மக்கள் வீடுகளின் முற்றங்களில் தானியங்களை உலர வைப்பதை பழக்கமாக கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**நீருண்துறை**

நீருண்துறை என்பது உண்ணும் நீர் கொள்ளும் நீர்த்துறை என பொருள்படும். இவ்வகையான உண்துறையை இலக்கியங்கள் காட்டுகின்றன. நீரின் பயன்கருதி இயற்கை நீர் நிலைகளான ஆறு, ஏரி, அருவி போன்றவற்றிலிருந்து வரும் நீரை தொழில் நுட்பத்தோடு குறிப்பிடுகின்றன. நீர் தேவைக்கேற்ப பயன்படுத்தப் பட்டது.

"உண்துறை மகளிர் இரிய குண்டு நீர்
வாளை பிறழும் ஊரற்கு"[5]

இப்பாடலில் நீர் உண்ணும் குளத்தில் மகளிர் பயந்து ஓடும்படி வாளை மீன்கள் பாய்ந்து ஓடின என்பதை நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. மேலும்

"என்றோ வாழி தோழி முற்றுபு
கறிவளர் அடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி"[6]

இப்பாடலில் மலையிலிருந்து விழும் அருவி நீரானது வழியும் போது, குரங்கு தீண்டியதால் விழுந்த பலாப்பழத்தை நீர்த்துறையில் கொண்டு வந்து சேர்த்ததை குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

ஐவகை நிலங்களை இயற்கை அமைப்பின் அடிப்படையில் பகுத்து அவை ஒவ்வொன்றுக்கும் பெயரிட்டு அழைத்தனர். இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்ட பழந்தமிழர்கள் நகர வாழ்க்கையை அமைத்த போது செயற்கையான வாழிடங்களை அமைத்தனர். வீடுகட்டும் தொழில் செய்பவர்கள் தங்கள் கடுமையான உழைப்பால் அழகிய கட்டிடங்களை அமைத்து கொண்டனர். இவ்வாறு கட்டிடக்கலை வளர்ச்சி பெற்றது.

**துணைநூற் பட்டியல்**

குறுந்தொகை, புலியூர்க்கேசிகன், 7-ம் பதிப்பு – 2020,
வெளியீடு, சாரதா பதிப்பகம்,
ஜி4, சாந்தி அடுக்ககம்,
3 ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014.

நற்றிணை நியூசெஞ்செரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098